# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,236 — 1922 ம் ஞூ தைமீ 6 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.— நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தெப்பனுவை ஆண்பெண் பள்ளிக்கூடத்திற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை; அஃதாவது:-

பிரதமபடத்து இல. 3,129. குறிச்சி—தெப்பனுவேபாலகம், குருவிற்றிகோறளை.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | தூவ .. | சிறுகாடு .. | யூ. கே. கர்மானிஸ்அப்பு மூதலாளி .. | 0 1 16·1 |
| 2 | எஸ்வத்தகேவத்த .. | தோட்டம் .. | ஷை .. | 1 0 24·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவர்வருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஞூ தைமீ 30 ந் தேதியிலன்று பிற்பகல் 1·30 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1921 ம் ஞூ மார்கழிமீ 23 ந் உ.

எச். டபிள்யு. கொட்ரிங்டன்,
அரசாட்சி ஏசண்டு.

---

### கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

புத்தளம் வட டிப்போ உப்பளத்திலுள்ள உத்தியோகத்தரின் வீடுகளைப் பழுதுபார்க்கும் வேலை யொப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புவோர் தமது கேள்விப்பததிரத்தை முத்திரித்த வுறையிலிட்டு அதன் இடது பக்கத்து மூலையில் " புத்தளம் வட டிப்போ உப்பளத்திலுள்ள உத்தியோகத்தரின் வீடுகளைப் பழுதுபார்க்கு வேலையின் ஒப்பந்தக்கேள்வி " யென்றெழுதிப் புத்தளம் உதவி யேசண்டவர்களுக்கு 1922 ம் ஆண்டு தைமாதம் 16 ந் தேதி பிற்பகல் ஒரு மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

3. கேள்விக்காறன் கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்தி எந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பறறிச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டிணைக்க வேண்டும்.

4. கேள்விக்காறன் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப் பட்டபின் ஞாயமான காலத்துள் தான் வேலையைக் கிரமமாக முடித்துப்போடுவதற்காக உதவி யேசண்டருடன் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத் தக்கதாகப் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டதின் 4 கிழமைக்குள் வேலையை முடித்துப்போட வேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத்துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

செய்யவேண்டிய வேலையின் விபரம்.

தற்போது அவ்வீடுகளிலுள்ள உளுத்தும் பழுதாயும் போன கிடுகு மரந்தடி முதலியவற்றைத் தயடுத்துப்போட்டு வேறு புதிய கிடுகு மரம் முதலியவற்றைப் போடவேண்டும்.

எல்லா வீடுகளும், குசினிகளும், மற்று வெளிவீடுகளும் பழுதுபார்க்கப்படவும், புதுககிடுகினால் வேயப்படவும், கூரைக்குமேற் பாரமாகப் பூட்டுகளை வைக்கப்படவும் வேண்டும். வீட்டுநிலம்யாவும் தேள்வையான இடங்களில் பழுதுபார்க்கப்பட்டும், மண்போட்டெழுப்பப்பட்டும், மொங்கான்போட்டு நிலம் சமப்படுத்தப்பட்டும், சாணகத்தால் மெழுகப்படவும் வேண்டும். வளவு வேலிகள் பழுதுபார்க்கப்பட வேண்டும். தேள்வையான இடங்களுக்குப் புதுக்கதியால் போடவேண்டும்.

உப்புச்சிறுப்பரின் குசினிச்சுவருக்கும் முதலாம் கொன்ஸ்தாபின் வீட்டுக்கும் புதுமண் தீத்தவேண்டும். சிறுப்பரின் வீட்டு முற்பக்கமாக சிறு வட்டவேலி போடவேண்டும்.

இரண்டாம் கொன்ஸ்தாபின் வீட்டுப் பக்கக் கதவுகளுக்கு இரு தாழ்ப்பாள் கம்புகளும் நாலு ஒண்டிகளும் போடவேண்டும். கதவுச்சட்டமொன்று புதிதாய் போடவேண்டும். நடுககதவுக்கு ஒரு பூட்டும் துறப்பும், குசினிக்கு ஆமைப்பூட்டும் துறப்பும் போடவேண்டும்.

காவற்காரன் கிற்சிலின் வீட்டுப் பின்கதவுச் சட்டத்தையும், முன் கதவுப் பூட்டும் துறப்பையும் பழுதுபார்க்க வேண்டும்.

வேலை முடிந்தவுடன் எல்லாக் குப்பை, கூளம், பழங் கிடுகுமுதலிய யாவும் டிப்போவிலிருந்து அள்ளிவிடவேண்டும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி அரசாட்சி ஏசன்றருக்காக.

புத்தளம் கச்சேரி,
1921 ம் ஆண்டு மார்கழிமீ 23 ந உ.

---

# 1912 ம ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத்தீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

## கள்ளுக்குதங்கள், 1922–23.

இதனடியிற் காணும் இடாப்புகளில் குறிக்கப்பட்டிருக்கிறபடி 1922 ம் ஆண்டு ஆடிமாசம் 1 ந் திகதி தொடக்கம் மூன்று குதங்களை அழித்துப்போடவும் இன்னுமொரு குதத்தை இடமாற்றி வைக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்று இத்தாற் சகலரும் அறிந்துகொள்க.

குதங்கள் அழித்தல், குதம் இடமாற்றலைப்பற்றி ஏதும் எழுத்துமூலமாக அறிவிக்க விரும்புவோருடைய பத்திரங்களை இன்றுதொடக்கம் 1922 ம் ஆண்டு மாசிமாதம் 10 ந் திகதிவரைக்கும் ஏற்றுக்கொள்ளவும் அத்திகதி பகல் 2 மணி நேரம்வரையில் முகாமுகமாய் அவரவர்கள் வாக்குமூலங்களை அறிந்துகொள்ளவும் அரசாட்சி ஏசன்றர் ஆயித்தமாயிருப்பார்.

எல். டபிள்யு. ஸீ. ஸ்கிரேடர்,
வடமாகாண அரசாட்சி ஏசன்றர்.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1921 ம் ஸ்ரீ மார்கழிமீ 19 ந உ.

மேலே காட்டியிருக்கும் இடாப்புகள்.

A.—அழித்துவிட எண்ணியிருக்கும் கள்ளுக்குதங்கள்.

| இல. | | பகுதி. | | இடம். |
|---|---|---|---|---|
| 5 | .. | யாழ்ப்பாணம் | .. | வண்ணார்பண்ணை தென்கிழக்கு (ஆரியகுளம்) |
| 36 | .. | தென்மராட்சி | .. | கைதடி நுணுவில் |
| 51 | .. | தீவுபற்று | .. | நாரந்தனை |

B.—இடமாற்ற எண்ணியிருக்கும் கள்ளுக்குதம்.

கரையூர் 4 ம் இலக்கக் குதத்தை கரையூர்—சுண்டிக்குளி (கொய்யாத்தோட்டம்) கிராமத்தெல்லைக்குள்.

---

## சாராயக் குதம், 1922–23.

இதனடியில் காணும் இடாப்பில் குறிக்கப்பட்டிருக்கிறபடி 1922 ம் ஆண்டு ஐப்பசிமாசம் 1 ந் திகதி தொடக்கம் ஒரு குதம் அழித்துப்போட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்று இத்தால் சகலரும் அறிந்துகொள்க.

குதம் அழித்தலைப்பற்றி ஏதும் எழுத்துமூலமாக அறிவிக்க விரும்புவோருடைய பத்திரங்களை இன்று தொடக்கம் 1922 ம் ஆண்டு மாசி மாதம் 10 ந் திகதி வரைக்கும் ஏற்றுக்கொள்ளவும் அத்திகதி பகல் 2 மணி நேரம் வரையில் முகாமுகமாய் அவரவர்கள் வாக்குமூலங்களை அறிந்துகொள்ளவும் அரசாட்சி ஏசன்றர் ஆயித்தமாயிருப்பார்.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1921 ம் ஸ்ரீ மார்கழிமீ 19 ந உ.

எல். டபிள்யு. ஸீ. ஸ்கிரேடர்,
வடமாகாண அரசாட்சி ஏசன்றர்.

அழித்துவிட எண்ணியிருக்கும் சாராயக்குதத்தின் இடாப்பு.

| இல. | | பகுதி. | | | இடம். |
|---|---|---|---|---|---|
| 3 | .. | யாழ்ப்பாணம் | .. | .. | வண்ணார்பண்ணை கிழக்கு. |

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.